Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (11-11-65) இதழ் 272

விசுவாவசு ஐப்பசி 26 றஜபு பிறை 16 வியாழக்கிழமை

முக்கிய அறி॰த்தல்

மில்க்வைற் நீல சோப்

தற்பொழுது

புதிய ரசாயனப் பொருட்கள்

சேர்க்கப்பட்டு

பெரிய சைஸ் கட்டியாக

தயாரிக்கப்படுகின்றது.

20 சதத்திற்கு எங்கும் கிடைக்கும்.

கூடிய உடுப்புகளை சலவை செய்யலாம்.

Advt

### கட்டுப்பாட்டு விலை?

பம்பலப்பிட்டி, புதன் ரேடியோ பற்றறிகள், தையல் நூல், மண்வெட்டி முதலியவற்றைக் கட்டுப்பாட்டு விலையின் கீழ் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து வருவதாகத் தெரியவருகிறது.

கட்டடங்களுக்குத்தேவையான பொருட்களும் கட்டுப்பாட்டு விலையின்கீழ் கொண்டுவரப்படலாம் எனத்தெரியவருகிறது.

# வானொலி நிலையம் இங்கு அமைக்கப்படும்

## சட்டவிரோதக்காரர் என கைது செய்யப்படுபவர்கள

### யாழ். பொலிஸ் அதிகாரிகள்முன் இனி ஆஜர் செய்யப்படுவர்

யாழ்ப்பாணம்' வியா சட்டவிரோதக் குடியேற்றக் காரர்களை கைதுசெய்வதுபற்றியும் அவர்களை துன்புறுத்துவதுபறறியும் நேற்று முன்தினம் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் வடமாகாண பொலிஸ் கண்காணிப்பாளர் திரு. ஜே. வான்சன்டனுடனும், பொலிஸ் உதவி கண்காணிப்பாளர்கள் ருவாளர்கள் டி. டி. சில்வாவுடனும்' ஏ. ஜே. இடமல் கொடையுடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்தியுள்ளார்.

கிளிநொச்சித்தொகுதியில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்படுபவர்கள் தற்பொழுது வவனியா பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்வது போலல்லாமல் யாழ்ப்பாணம் பொலிஸ் உதவி கண்காணிப்பாளர் முன்னே ஒப்படைக்கப்படல்வேண்டுமென்று இப் பேச்சுவார்த்தையின் போது முடிவு செய்யப்பட்டது. பொலிஸ் உதவி கண்காணிப்பாளர், அவர்கள் முன்னே ஒப்படைக்கப்படும். சந்தேக நபர்களைப் பிணையில் விடுவதற்கும் பொறுப்பாயிருப்பார்.

இப்படிக் கைதுசெய்யப்பட்டவர்கள் சார்பில் கைது செய்யப்பட்டவர்கள் 1949-ம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் தொடர்ந்து வசித்து வருகின்றனர் என்பதை நிரூபிக்கும் பத்திரங்களெல்லாவற்றையும் பொலிஸ் உதவிக்கண்காணிப்பாளருக்கு சமர்ப்பித்து கைது செய்யப்பட்டவரை பிணையில் விடக்கோரலாம்.

இதுசம்பந்தமாக சட்டவிரோவிரேரத குடியேற்றக்காரரை பிணையில் விடுவது தடுப்பு நிலையத்திற்கு அனுப்புவதுபற்றி யாழ் பொலிஸ்

(5-ம் பக்கம் பார்க்க)

## கமிஷன் தலைவர் சூசக தகவல்

யாழ்ப்பாணம், வியாழன்

வேலையில்லாதிருக்கும் நூற்றுக்கணக்கான சங்கீத பூஷணங்களின் நிலைபற்றி, யாழ்ப்பாணத்தில் வானொலி நிலயம் அமைக்கப்படும் போது கவனிக்கப்படலாமென வானொலி ஒலிபரப்புக் கமிஷன் தலைவர், நேற்றைய விசாரணையின் போது ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார்.

எல்லாச் சமயத்தவர்களுக்கும், வானொலியில் ஒரே அளவு நேரம் ஒதுக்கப்படவேண்டுமென்றும், வானொலியில் சமய சம்பந்தப்பட்ட ஒலிபரப்பின் போது, அதற்குச் சரியான மரியாதை கொடுக்கப்படுகிறதில்லையென்றும் வண. பிதா எஸ். குலேந்திரன், வண. இரத்தினராசா, திரு. எஸ். யூ, சோமசேகரம் ஆகியோர் நேற்றுக் காலை இலங்கை வானொலி தகவல் விசாரணை கமிஷன் முன் சாட்சியமளித்த போது தெரிவித்தனர்.

வானொலி கமிஷனுக்கு திரு. ஏ. ஜே. எச். கலுகலை தலைமைதாங்கினார். திரு. பி. நிசங்கா, வண. ஹெட்டிமுல்லை, வகிரபுத்ததேரோ பேராசிரியர் ஆர். எச். போல், திரு. ஈ. பி. லப்பொல, திரு. சகிட் அகமத் ஆகியோர் கமிஷனின் மற்றைய அங்கத்தவராவர்.

யாழ்ப்பாணத்தில் வானொலி நிலையமொன்றிருந்தால் இங்குள்ளவர்களின் திறமைகளை நேராக அறிந்துகொள்ளமுடியுமென்றும் நெடுந்தீவு, புங்குடுதீவு போன்ற இடங்களிலுள்ள கலைஞர்கள் கொழும்பிற்குச் செல்வதில் பிரயாணக் கஷ்டங்கள் உண்டென்றும் சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டது.

இங்குள்ள கலைஞர்களைத் தெரிவுசெய்வதற்கு ஒருகுழு இருப்பது நல்லதென்றும் கூறப்பட்டது.

இங்குள்ள கலைஞர்களுக்கு ஐந்து ரயில் பிரயாணவாரண்டுகள் கொடுக்கப்படுகிறதென்றும் பெண்கள் நிகழ்ச்சிகளுக்காக கொழும்புக்குச் செல்ல விரும்புவதில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

காஞ்சென்ற எம். கே. தியாகராஜாபாகவதர்பற்றி கமிஷன் தலைவர் கேட்ட போது, பாகவதர் சினிமாப் பாடல்களிலும் பார்க்கக் கர்நாடக சங்கிதம் அதிகம் பாடியுள்ளார் என்று வண. இரத்தினராசா கூறினார்.

அரசியல் ஒலிபரப்புச் சம்பந்தமாக தலைவர் கேட்ட போது, ஒவ்வொரு கட்சிக்கும் சில மணி நேரம் ஒதுக்கலாமென்றும், தேர்ல்தல் சமயத்தில் மட்டுமே அப்படி ஒதுக்கவேண்டுமென்றும், தொடர்ந்து 5 வருடகாலத்திற்கு அடுத்த தேர்தல் வரை அரசியலுக்கு நேரம் ஒதுக்கத் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் நிலைமை பற்றியும் அரசாளும் முறை பற்றியும் மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென று திரு. சோமசேகரம் கூறியபொழுது, மக்கள் குரல்தான் மகேஸ்வரன் குரல் எனத் தலைவர் தெரிவித்தார்.

இலங்கை வானொலியிலிருந்து மேல் நாட்டுச் சங்கீதத்தை நீக்கவேண்டுமென்று திரு. சோமசேகரம் கூறிய பொழுது, சீனா, ஜப்பான் மற்றும் நாடுகளில் மேல் நாட்டு சங்கீதம் இடம்பெற்றுள்ளதால் தலைவர் தெரிவித்தார்.

உலகில் பல முன்னேற்ற நாடுகளில் கல்வி அபிவிருத்திக்காக வானொலி, டெலிவிஷன் உபயோகிக்கப்படுகிதென்றும், இதனால் அதிக பலன் உண்டென்றும் தலைவர் கூறினார்.

கொழும்புத்துறை மகா வித்தியாலய அதிபர் திரு. எஸ். பரம்தில்லைராசா சாட்சியமளித்தபோது, யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கதிகமான சங்கிதபூஷணங்கள் வேலையற்றிருப்பதாகவும், அவர்கள் தனிப்பட்டமுறையில் வீடுகளுக்குச் சென்று பாடம் சொல்லிக்கொடுப்பதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நிலையம் அமைக்கும் போது இவ்விஷயம் கவனிக்கப்படுமெனத் தலைவர் தெரிவித்தார்.

### பட்டரிகள் தட்டுப்பாடு

பட்டரி பஞ்சம் ஏற்பட்டுள்ளதால் பல வானொலிப் பெட்டிகள் இயங்காமல் இருப்பதாகவும், 16 ரூபா விற்ற விற்ற பட்டரிகளைதற்பொழுது 55 ரூபா கொடுத்தாலும் வாங்க முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் சிறந்த கலைஞர்கள் இருப்பதாகயும், அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லையெனவும் கூறம்பட்டது.

வானொலி நிகழ்ச்சிகளை சங்கீத நிபுணர்களே தயாரிக்க வேண்டுமென்றும் தற்பொழுது தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளில், சினிமாப் பாடல்கள் பற்பல தலையங்கத்தின்கீழ் ஒலிபரப்பப்படுகிறதென்றும் திரு. பரம் தில்லைராஜா கூறினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கலைஞர்களுக்கு அனுப்பப்படும் புகையிரத வாரண்டு

(8-ம் பக்கம் பார்க்க)

## நாவலர் சந்திப் படுகொலை

## இன்னும் எவரும் கைதாகவில்லை

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதியில் நாவலர் சந்திக்குஅருகாமையில் சென்ற திங்கட்கிழமை மாலை சுப்பிரமணியம் தெய்வேந்திரம் என்ற கடைச்சிப்பந்தியொருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிஸ், குற்றப் பிரிவுப் பகுதிஇன்ஸ்பெக்டர் சௌந்தரநாயகம் தலைமையில் பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

கொலைக்கு உபயோகப்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மோட்டார்காரையும் காரில் அச்சமயம் பிரயாணம் செய்தவர்களெனக் கருதப்படும் மூவரையும் பொலிஸார்இன்னமும் தேடி வருவதாகக் கூறப்படுகிறது. எனினும் இக்கொலை சம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. யாழ்ப்பாணம் பொலிஸில் விசாரித்தபொழுது, புலன் விசாரணை நடைபெறுவதாகவும் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லையென்றும் தெரியவருகிறது.

### எஸ்கிமோக்கள் ஆசியர்களா?

ரோமாபுரி, நவ. 10 உலகின் மிகப் பெரும் தீவான கிரீன்லந்திய, 2000 ஆண்டுகளுக்கு முன் ஓவியர் ஒருவரால் வரைந்ததாகக் கூறப்படும் வர்ணச் சித்திரமொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சித்திரம் பற்றிய ஆராய்ச்சியானது, எஸ்கிமோக்கள்பூர்வீகத்தில் ஆசியாவில் தோன்றியவர்கள் என்பதை நிரூபிப்பதாக இருக்கிறதென இத்தாலிய அறிஞர் ஒருவர் கூறியிருக்கிறார் இந்த சித்திரத்தில் சைபீரிய நாய் ஒன்றைஒருஎஸ்கிமோபிடித்துச் செல்வது இடம் பெற்றிருக்கிறது.

வத்திக்கான், நவ. 10 வத்திக்கான் கிறிஸ்தவ ஒற்றுமை மகாநாட்டை வருகிற டிசம்பர் 8-ம் திகதி போப்பாண்டவர் முடித்து வைப்பார். (பி. டி. ஸி.)

## இரண்டாவது அமெரிக்கர் தீமூட்டிக் கொண்டார்

### யுத்தத்தை எதிர்ப்பதாக கூச்சலிட்டார்

நியுயோர்க், நவ. 10 ஐ. நா. தலைமைக்காரியாலயத்துக்குமுன் இன்று 22 வயதான ஒரு நியுயோர்க் இளைஞர் தம்மீதுபெட்ரோலை ஊற்றி தீ மூட்டிக்கொண்டதாகப்பொலிசார் அறிவித்தனர்.

''நான் யுத்தத்திற்கு எதிரானவன். எல்லா யுத்தங்களுக்கும் எதிரானவன்'' எனக் கூச்சலிட்டபடியே அவர் தீமூட்டிக் கொண்டார்.

ரோஜர் லாபோர்டே என்ற அந்த நபர் பின்பு ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்.

தாம் கத்தோலிக்கதொழிலாளர் ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒருவர் என அவர் கூறினார்.

ஒருவாரத்துக்கு முன்பு தான் அமெரிக்காவின் வியட்னாம் கொள்கையை ஆட்சேபித்து நார்மன் மொரிஸன் என்பவர் தீக்குளித்து மாண்டார்.

ஆனால் லாபோர்ட்டே ஏன் தன்னைத் தீமூட்டிக் கொண்டார் என்ற விபரம் இன்னும் தெரியவில்லை.

(பி. டி. ஸி)

### மணிவாக்கு

மனிதர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படாமல் இருந்தால் அவர்கள் சோம்பேறிகளாகவும், சுகவாசிகளாகவும் ஆகிவிடுகிறார்கள்.

— விநோபாபாவே


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஐப்பசி மீ 26 உ (11-11-65)


## யாழ்ப்பாணத்தில் வானொலி

வானொலி ஒலிபரப்பு பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் தனது விசாரணையைச் செய்து வருகிறது. இப்பகுதி மக்களின் அபிபபிராயத்தையும் நன்கு கவனித்து அது தனது அறிக்கையைச் சமர்ப்பிக்குமென்பதில் நமக்கு நம்பிக்கையுண்டு.

இலங்கைவானொலி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கிறது. ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசாங்கமும் தனது உரிமையை விடுவதில்லை. வானொலி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் அரசாங்கமே இறுதி அதிகாரம் முழுவதையும் வைத்துக் கொண்டுள்ளது. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் வானொலி இருப்பினும் ஒலிபரப்பு சம்பந்தமான நிகழ்ச்சிகளை பாரபட்சமில்லாமலும் நிதானமாகவும் கவனித்துச் செல்வதற்கு வானொலி டைரக்டர் ஜெனரலுக்கு சுதந்திரம் அளிக்கப்படவேண்டும். தேர்தல் இலாகா அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பினும் தேர்தல் கமிஷனருக்கு நடைமுறைச் சுதந்திரம் இருப்பது போன்று வானொலி டைரக்டர் ஜெனரலுக்கு சுதந்திரம் இருக்க வேண்டும். வானொலி ஒலிபரப்பு சம்பந்தமான அன்றாட விவகாரங்களில் மந்திரிகளின் தலையீடோ மற்றும் தலையீடுகளோ இருக்கக் கூடாது.

மத்திய ஒலிபரப்பு நிலையம் ஒன்று மட்டும் இலங்கைக்குப் போதாது. பிரதேச ஒலிபரப்பு நிலையங்களும் அமைக்கப்பட வேண்டும். இந்த ஒலிபரப்பு நிலையங்கள் பிரதேச ஆலோசனைச்சபைகளினால் வழிநடத்தப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு வானொலி ஒலிபரப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்பது நீண்டநாளையக் கோரிக்கை. இங்கு ஒரு வானொலி நிலையம் அமைக்க வேண்டுமென்பதற்குப் பல காரணங்கள் உள. (1) கொழும்பிலுள்ள வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளை யாழ்ப்பாணப் பகுதியிலுள்ளவர்கள் தெளிவாகக் கேட்க முடிவதில்லை. இரவு வேளைகளில் நிகழ்ச்சிகள் தெளிவில்லாதிருப்பதுடன் துப்பரவாகக் கேட்கவே முடியாதுபோய்விடுகிறது. (2) யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள கலைஞர்கள் வானொலி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காககொழும்புக்குப் பிரயாணம்செய்ய வேண்டியுள்ளது. இதனால் அவர்கள் வீண் கஷ்டங்களையும் சிரமங்களையும் அனுபவிக்க நேரிடுகிறது. (3) யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பாடசாலைப் பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிக் கோஷ்டிகளும் மற்றும் சங்கீத, நாட்டிய, நாடகக் கோஷ்டிகளும் கொழும்புக்குச் சென்று வானொலியில் தங்கள் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு, செலவு காரணமாகச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. (4) கொழும்புக்குச் சென்று திரும்புவதனால் ஏற்படக்கூடிய செலவு, சிரமம் ஆகியவைகளைக் கருதி இப்பகுதியிலுள்ள அறிஞர்களும், கல்விமான்களும் வானொலி விவாத அரங்குகளிலும், உரை நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்வதைத் தவிர்த்துவிடுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஒரு வானொலி நிலையம் நிறுவப்பட்டால் இந்தக் குறைகள் நீங்கிவிடும். இதைவிட கர்நாடக சங்கீதம், நாட்டியம், நாடகம் தமிழ்பேசும் மக்களின் கிராமியக் கலைகள் வளரவும் வானொலி நிலையம்உதவுவதாகும். கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் இப்பகுதிப் பாடசாலைகள் கவனம்செலுத்தவும் வாய்ப்புக் கிடைக்கும்.

இன்று பெரிய நாடுகளிலும்சரி சிறிய நாடுகளிலும்சரி, கல்வி வளர்ச்சிக்கும், முதியோர் கல்வி முறைக்கும் வானொலி பயன் படுத்தப்படுகிறது. கல்வி நிகழ்ச்சிகள் இப்பொழுது சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை. சகல பாடசாலைகளும் இந்த நிகழ்ச்சிகளை முழுமையாகப் பயன்படுத்தமுடியாவிட்டாலும் பிரிவுகளுக்குத் தகுந்ததாகப் பயன்படுத்தலாம். கல்வி இலாகாவும் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தலாம். தாய்மொழி கற்பவர்களைவிட பிறமொழிகள் கற்பவர்களுக்கும் வானொலி பெரிதும் உதவமுடியும்.

இலங்கையில் வர்த்தக ஒலிபரப்புச் சேவைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பல நாடுகளிலும் வர்த்தக ஒலிபரப்பு குறைக்கப்பட்டுவருகிறது. இங்கும் இந்த வர்த்தக ஒலிபரப்பு நிகழ்ச்சியை முழுமையாக ஒழிக்க முடியாவிடினும் படிப்படியாகவாவது குறைத்து வருவது நல்ல சங்கீதத்துக்கும், நற்கலைகளுக்தம் தொண்டு செய்வதாகும்.

யாழ்ப்பாணத்தில் பலர் வானொலி நிகழ்ச்சிகள் பற்றியும், அதன் தரம் பற்றியும் தங்கள் கருத்துகளைத் தெரிவித்துவருகின்றனர். இவைகளை விசாரணைக் கமிஷனர்கள் கருத்தில்கொண்டு தங்கள் அறிக்கையில் குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதி மக்களும் பொதுவாகத் தமிழ்மக்களும் வானொலி மூலம் அதிக பயன்பெறத் தக்க சிபார்சுகளைச் செய்வார்களெனநம்புகிறோம்.

ஆசிரியருக்கு கடிதம்

## யாழ்ப்பாண மாநகரசபை நிர்வாகம்

நீண்டகாலமாக யாழ்ப்பாண நகரத்தில் வாழ்ந்து வருபவன் என்ற முறையிலும் இங்கு வாழ்ந்து வருபவர்களின் நலனிலும் மாநகரசபையின் நலனிலும் அக்கறை கொண்டுள்ளவன் என்பதாலும் இந்த மாநகரசபை உருவாகியதிலிருந்து இதன் நடவடிக்கைகளை மிக உன்னிப்பாக நான் கவனித்துள்ளேன். யாழ்ப்பாண மாநகரசபையின் முதலாவது மேயராகக் கடமையாற்றிய காலஞ்சென்ற திரு. சாம். ஏ. சபாபதி மேயராகப் பதவி வகித்து வந்த காலத்தில் மாநகரசபையின் நிர்வாகம் மிகவும் சீராக நடைபெற்றுவந்தது. இதனால் மாகரசபையும் பொதுவாக பொதுமக்களும் மிக்க திருப்தி கொண்டார்கள். அவரது நிர்வாகத்தை அவரது ஆதரவாளர்களும் அவருக்கு எதிராகவுள்ளவர்களும் பாராட்டினார்கள். அவர் மேயராகப் பதவி வகித்துவந்த காலத்தில் நிர்வாகத்தில் மாநகரசபை அங்கத்தவர்கள் வீணாகத் தலையிடுவது இயலாதஒரு காரியமாகவிருந்தது. ஒரு தனி அங்கத்தவர் எவ்வித சக்தி பெற்றிருந்த போதிலும் சட்டவிதிமுறைகளை மீற முடியாதிருந்த அப்போது லஞ்சம், ஊழல், பாரபட்சம் இவற்றுக்கெல்லாம் இடமேயில்லாதிருந்தது. அவர் பதவியிலிருந்து விலகிய பின்னர்மெல்லமெல்லநிர்வாகம் சீர்குலையத் தொடங்கியது. வாடிகால்வாய், வீதிகள், மின்சாரம் இவையெல்லாம் கவனிக்கப்படாததால் மோசமாகிக்கொண்டு வரத் தொடங்கியது. இதனால் பொதுமக்கள் சொல்லவொண்ணாக் கஷ்டத்துக்குள்ளானார்கள்.

இப்போதுள்ள மேயர் பதவியேற்றதிலிருந்து நிலைமை சீரடைந்து வருவது அவதானிக்கக்கூடியதாகவிருக்கிறது.

வீதிகள் திருத்தும் வேலைகள், குளங்களுக்கு எல்லைச் சுவர்கள் கட்டும் வேலைகள் ஆகியனவெல்லாம் இப்போது நடைபெற்று வருவதை நாம் காணக்கூடியதாகவிருக்கிறது. இதோடு மாநகரசபை மராமத்து என்ஜினியரும் இவ்வித வேலைகளில் அதிக அக்கறை செலுத்துவது வரியிறுப்பாளர்களுக்கு மிக்க மகிழ்ச்சியளிப்பதாக இருக்கிறது.

மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டப்பட்டு வந்த மின்சாரப் பகுதியினரும் இப்போது தமக்குக் கிடைத்துள்ள வசதிகளைக்கொண்டு பல திருத்தங்களைச் செய்துள்ளதால் பொதுமக்கள் மிக்க நன்மையடைந்து வருவது அவதானிக்கக்கூடியதாகவிருக்கிறது. பல பகுதிகளில் மின்சார விநியோகம் அதிகரிக்கப்பட்டுள்ளது. புங்கங்குளம், முஸ்லிம்வீதி ஆகிய இடங்களில் புதிய மின்சாரநிலையங்கள் நிறுவப்பட்டுள்ளது இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டிய ஒன்று. இன்னமும் இரு புதிய மின்சார உபகரணங்கள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மின்சாரத்தடை பற்றித் தெரிவிக்கப்பட்டுகுறைபாடுகள் இப்போது கவனிக்கப்பட்டுவருகின்றது என்பதும் நாம் அறியக்கூடியதாக இருக்கிறது. நேர்மை மிக்க திறமைவாய்ந்த மின்சார சுப்ரிண்டன் இருப்பது மாநகரசபைக்கு நல்ல வாய்ப்பாக இருக்கிறது எனக் கூறலாம். அவர் தமது ஆற்றலைக்கொண்டு தம்மாலான சீர்திருத்தங்களைச் செய்து வருகிறார். மாநகரசபை அங்கத்தவர்கள் நகரின் நலன் கருதி மேயருக்கும் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கும் தமது முழு ஒத்துழைப்பையும் கொடுப்பார்களென நாம் நம்புகின்றோம். நகரம் சிறந்து விளங்க பொதுமக்கள் தமதுகடமைகளை உணர்ந்து செயலாற்றவேண்டுமென நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

சி. முருகரத்தினம்.
கந்தர்மடம்.

## திரு. கந்தவனம் பொன்னம்பலம்

அண்மையில் இவ்வுலக வாழ்வுநீத்த சமூகத்தொண்டர் திரு. க. பொன்னம்பலம் அவர்கள் கட்டுவனூரைச்சேர்ந்த தண்ணீர்த்தாழ்ப் பகுதியில் பிறந்து அதனை அடுத்த மயிலிட்டி தெற்கில் விவாகம் செய்து வாழ்ந்தார். மாணவப் பருவத்திலிருந்து இறைவனடி புகும்வரை அவ்விரு ஊர்களின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் உழைத்தவர்.

பாலர் ஞானோதய சங்கம், மத்திய மயிலிட்டி ஐக்கிய பங்கம், மத்திய மயிலிட்டி ஐக்கிய பண்டகசாலைச் சங்கம், விளைபொருள் உற்பத்திச்சங்கம், அந்தியகால சகாயநிதிச்சங்கம், வெண்புகையிலைச்சங்கம், ஞானோதய மாதர்சங்கம், ஞானோதய மாதர் நுண்கலை ஐக்கிய சங்கம், இந்துசமய விருத்திச்சங்கம், திவ்விய ஜீவன சங்கம்' சனசமூக நிலையம் முதலாய பல சங்கங்களின் தோற்றத்துக்கு மூலகாரணமாக இருந்ததோடு, அவற்றின் முக்கிய நிர்வாகத்தவராயும் இருந்து அவற்றின் முன்னேற்றம் கண்டவர். பாலர் ஞானோதய வித்தியாசாலை, வாசிகசாலை, உபதபாற்கந்தோர், பண்டகசாலை நிலையம், வைத்தியசாலை, நெசவுசாலை, சனசமுக நிலைய மண்டபம் விளைபொருள் உற்பத்தி சங்க நிலையம் முதலாயின அவரது அயரா உழைப்பின் சின்னங்களாகும்.

மயிலிட்டி கிராமச் சங்க அங்கத்தவராகித் தமதுகிராமத்துக்கும், தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலைச் சங்கம் முதலியவற்றின் அங்கத்தவராகி அயற்கிராமங்களுக்கும் மலையாளப் புகையிலைச்சங்கம், ஐக்கிய மேற்பார்வைச்சபை முதலியசங்கங்களிற் பங்கு கொண்டு நமது நாட்டிற்கும் தக்க தொண்டு செய்தவர். அவர் பிரிவு பேரிழப்பு.

சி. சிவலிங்கம்
ஆ. நாகலிங்கம்
காரியதரிசிகள்
பாலர் ஞானோதய சங்கம்

## கரைச்சிப் பகுதிக்கு இலவச விதைநெல்

பரந்தன், புதன்

கரைச்சி காரியாதிகாரி பிரிவில், கடந்த மூன்று போக வேளாண்மையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளில் சுமார் 2500 பேருக்கு 3791 1/2 ஏக்கர் நிலத்துக்கு விதைக்கக்கூடிய 7583 புசல் நெல் இலவசமாக வழங்கப்பட்டுவருகிறது. இலவச விதை நெல் வழங்குவதில் கரைச்சிப்பகுதி காரியாதிகாரி திரு. ஏச். ஈபிள்ளைநாயகம் மிகுந்த ஊக்கத்துடன் வேலைகளைச் செய்து வருகிறார்.

## நாட்டிலும் நகரிலும்

கீரிமலைக்கேணியில் சென்ற வாரத்தில் ஒருநாள் நாலு ஐந்து பேர் சாராயப்போத்தல் சகிதமாக வந்து குடித்து கும்மியடித்து, கேணிப்படிகளில் போத்தல்களை உடைத்தெறிந்து, இறைச்சி மீன், எச்சில் இலைகளையும் கண்டபடி வீசி அசுத்தப்படுத்திவிட்டுப் போனார்களாம். காவற்காரர் காலை 5 மணிக்கு வந்து பதினொரு மணிநேரம் வேலைசெய்துவிட்டு மாலை 7 மணிக்குப் போய்விடுவாராம். இந்தச் சம்பவம் இரவில் நடந்திருக்கிறது. கேணிக்கு மத்தியில் எரிந்துகொண்டிருந்த பெரிய மின்சார விளக்கும், பல்பு இல்லாமல் இப்பொழுது எரிவதில்லையாம். இதற்கு மறுநாள் குளிக்கவந்தவர்கள் தோய்த்துக் காயப்போட்ட 2 நைலோன் சேட்டுகள் களவுபோய்விட்டனவாம். கீரிமலையில் இப்பொழுது களவுகள் அடிக்கடி நடக்கின்றனவாம். பணம், கைக்கடிகாரங்கள் முதலியவற்றையும் சிலர் பறிகொடுத்துவிட்டார்களாம்.

தெல்லிப்பழை பட்டினசபையினால் நியமிக்கப்பட்டுள்ள பாதுகாவலர் இதெல்லாவற்றையும் என்னிடம் கூறிமுறையிட்டார். குடிவெறியர்களின் அட்டகாசம் அடிதடியாக முற்றும்போது தம்மால் எதுவும் செய்யமுடியவில்லையே என்று அவர் மனம் வெதும்புகிறார்.

கீரிமலை க்ஷேத்திரத்துக்கு வந்து அந்த நன்னீரூற்றில் குளித்துவிட்டுப் போகிறவர்கள் தொகை நாளுக்குநாள் அதிகரித்துவருகிறது. இவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பளிக்கவேண்டியது மிகவும் அவசியம். வெளியூர்களிலிருந்து வரும் உல்லாசப் பிரயாணிகள் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் சேஷ்டைகளைக் கட்டுப்படுத்துவதற்கும், தேசாபிமானம் இல்லாத திருட்டுப் பேர்வழிகள் அவர்களைத் துன்புறுத்தாமல் இருப்பதற்கும், கீரிமலையை ஒரு புகழ்பெற்ற உல்லாசப் பொழுதுபோக்கு ஸ்தலமாக்கவேண்டின், அங்கே பல திருத்தங்கள் செய்ய வேண்டியிருக்கிறது.

இரவு பகல் காவல்செய்வதற்குக் குறைந்த பட்சம் இரண்டு காவலாளிகளையாவது நியமிக்கவேண்டும். தனி ஒருவர் வருடத்தில் 365 நாட்களும் வேலைபார்ப்பது மிகவும் கடினம். காவலாளிகளுக்குத் துணையாக இரண்டு பொலிஸார் எப்பொழுதும் இருக்கவேண்டும். தற்சமயம் ஏதாவது புரளி ஏற்பட்டால் அதை காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திற்குத் தெரிவிப்பதற்கு ஒரு டெலிபோன் கூட இல்லை. முன்பு சில காலம் பொலிஸார் அடிக்கடி கீரிமலைக்கும் ரோந்து வந்து போனதாகவும் இப்பொழுது அந்த நல்ல வழக்கத்தைக் கைவிட்டுவிட்டார்களென்றும் தெரியவருகிறது.

தெல்லிப்பளைபட்டினசபை கீரிமலையில் பல முன்னேற்றமான திருத்தங்களைச் செய்திருப்பதை எவரும் மறுக்க முடியாது. அங்கு வந்து போகிறவர்களின் தொகை அதிகரித்துவிட்டதால் இன்னும் பல திருத்தங்களுக்கு இடமிருக்கிறது. இவற்றைக் கொண்டு நடத்துவதற்குப் போதிய பணவசதி இல்லையேயென்று பட்டினசபை முறையிடக்கூடும். இதற்கு நான் ஒரு யோசனை கூறுவேன்.

கேணியை உபயோகிப்பவர்களிடம் ஐந்து சதமோ பத்து சதமோ கட்டணமாக அறவிட்டு, அந்தப் பணத்

(5-ம் பக்கம் பார்க்க)

# நியூயோர்க் நகரம் முற்றாக இருளில் மூழ்கியது

## ஐ. நா. விவாதங்கள் தடை; பல நகரங்களில் இருள்

### மின்சாரக் கோளாறு காரணம்

நியூயோர்க், நவ. 10

மின்சாரக் கோளாறு காரணமாக மாபெரும் நியூயோர்க் நகரம் நேற்றிரவு முற்றாக இருளில் மூழ்கியது. இதனால் ஐ. நா. விவாதங்களும் தடைபட்டன.

போஸ்டன், பிலடெல்பியா ஆகிய நகரங்களும், கனடாவில் ஒட்டாவா உட்பட சில நகரங்களும் இதனால் இருளில் மூழ்கின.

நியூயோர்க் வீதிகளில் போக்குவரத்து ஸ்தம்பித்துவிட்டது. லட்சக்கணக்கான வாகனங்கள் வீதிகளில் நின்றன. பூமிக்கடியிலுள்ள ரயில்வே நிலையங்களில் இரண்டரை லட்சம் மக்கள் இருளில் நிற்க வேண்டி வந்தது.

விசேஷ வானொலிச்செய்தி மக்களை அப்படியே இருக்குமாறு கேட்டுக் கொண்டது.

நியூயோர்க் வந்த விமானங்கள் வேறிடங்களுக்குத் திருப்பியனுப்பப்பட்டன. ஐ. நா. சபையில் விவாதங்களும் இதனால் பாதிக்கப்பட்டன.

மின்சாரக் கோளாறுக்கான காரணம் தெரியவில்லை. அமெரிக்க-கனேடிய எல்லையிலுள்ள நாகாரா நீர்மின்சார நிலையத்திலேயே இதற்கான கோளாறு ஏற்பட்டிருக்கும் எனக் கூறப்படுகிறது.

## ஹாங்காங்கில் சீன அகதிகள்

ஹாங்காங், நவ. 10

சீனாவிலிருந்து கடந்த 10 மாதங்களில் 3868 அகதிகள் ஹாங்காங்கிற்கு வந்திருப்பதா அறிவிக்கப்படுகிறது. 1962-ம் ஆண்டுக்குப் பின் இவ்வளவு பெருந்தொகை சீனர்கள் அகதிகளாக வந்ததில்லை என்றும், அப்போது 6255 சீனர்கள் வந்தார்கள் என்றும் கூறப்பட்டது. விஸா பெற்றவர்கள் இக்கணக்கில் சேர்க்கப்படவில்லை. 491 சீனர் மக்கோ தீவுக்கு தப்பிச் சென்றார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

## ஐ. நா. வில் இம்முறையும் சீனாவுக்கு ஆதரவு இல்லை

### ராஜதந்திரிகள் கருத்து

ஐ. நா. நவ. 10

இம்முறையும் ஐ. நா. வில் சீனப்பிரதிநிதித்துவம் தோல்வி அடையும் என பெரும்பாலான ராஜதந்திரிகள் நிச்சயமாகக் கருதுகிறார்கள்.

இம்முறை 11 ஆசிய-ஆபிரிக்க நாடுகள் சீனாவை அனுமதிக்கும் பிரேரணையைக் கொண்டுவந்திருக்கின்றன. ஆனால் இந்த நாடுகளுக்கிடையேகூட சபையில் சமர்ப்பிக்கும் தீர்மானம் பற்றி இருவித கருத்துக்கள் இருப்பதாகத் தெரிகிறது. கம்போடியாவும், மற்றும் சில நாடுகளும் சீனாவை சபையில் அனுமதிக்கும்படியான சாதாரண ஒரு தீர்மானத்துக்கு ஆதரவாய் இருக்கின்றன. ஆனால் அல்பேனியா, மாலி, ருமேனியா ஆகிய நாடுகள் கோமிண்டாங் சீனாவை ஐ. நா. வில் இருந்து அகற்றவேண்டும் என்ற அம்சத்தையும் அதில் சேர்க்க வேண்டும் எனக் கூறுகின்றன.

அதேசமயம், பீகிங்குக்கு ஐ. நா. வில் இடமளிக்க வேண்டும் என்றும், ஆனால் கோமிண்டாங்சீனா அகற்றப்படக் கூடாது என்றும் வேறு பல நாடுகள் கருதுகின்றன.

இவ்வாண்டு வாக்கெடுப்பு மிகவும் நெருக்கமாய் இருக்குமென்றும், சீனா 2 முதல் 6 குறைவான வாக்குகளே பெறும் என்றும் அமெரிக்கர்கள் கருதுகிறார்கள். ஆனால் இந்த வித்தியாசம் 6 முதல் 9 வாக்குகளாய் இருக்குமெனகோமிண்டாங் சீனா கருதுகிறது. எனினும் சீனாவுக்கு ஆதரவாக சிறிய அளவு பெரும்பான்மை கிடைக்குமென, பீகிங் ஆதரவுக்காரர்கள் கருதுகிறார்கள்.

சென்றமுறை (1963) வாக்கெடுப்பில் சீனாவுக்கு எதிராக 57 வாக்குகளும், ஆதரவாக 41 வாக்குகளும் கிடைத்தன. 12 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

எனினும் இம்முறை முதல் தடவையாக சீனாவுக்கு சிறியமெஜாரிட்டி கிடைக்குமானால், அடுத்த ஆண்டு அதை சபையில் அனுமதிக்க வாய்ப்பு ஏற்படக்கூடும். ஐ. நா. வில் பிரவேசிக்க குறைந்தது மூன்றில் இருமடங்கு வாக்குகள் தேவை. அதாவது 78 வாக்குகள் தேவை.

(பி.டி.ஐ. - பி.டி.வி.)

## நெருக்கடியின் விளிம்பில் ரொடீஷியா

### ஸ்மித் ஆர்ப்பாட்டம் பற்றி பிரிட்டனில் கவலை

ஸாலிஸ்பரி, நவ 10

ரொடீஷியா ஒருதலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்வது அண்மையிலோ அல்லது வெகுதூரத்திலோ இல்லை என பிரதமர் ஸ்மித் அறிவித்திருக்கிறார்.

பார்லிமெண்டின் அவசரக் கூட்டம் ஒன்றை அவர் நடத்தவிருக்கிறார்.

ஸ்மித் ஒருதலைப்பட்ச சுதந்திரப் பிரகடனம்பற்றி விரைவில் மீண்டும் பேசுவார் எனக் கூறப்பட்டது.

திரு. ஸ்மித்தின் போக்கு நாளுக்கு நாள் கடுமையாகி வருவதாக லண்டனில் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

ரொடீஷிய நிலைமை இப்போது படுமோசமாகிவிட்டது என பிரிட்டன் கருதுகிறது.

பிரதமர் வில்சன் நேற்று லண்டன் வந்திருக்கும் ரொடீஷிய பிரதம நீதிபதி சேர் ஹியூ பீடிலுடன் பேசினார். இன்னும் தொடர்ந்து அவருடன் பேச்சு நடத்தினார்.

தனது மந்திரிசபை சகாக்களுடனும் திரு வில்சன் நேற்று ரொடீஷியா பற்றி விவாதித்தார். ரொடீஷியப் பிரதமர் ஸ்மித் தம்மைச்சந்திக்க மால்டா வருவார் என தாம் எதிர்பார்ப்பதாகதிரு. வில்சன் குறிப்பிட்டார்,

## "தமிழுக்கு கமிட்டி தேவை இல்லை"

சென்னை, நவ. 10

தமிழ் வரலாறு பற்றிய ஆராய்ச்சியை ஏற்கனவே பல ஸ்தாபனங்கள் மேற்கொண்டிருப்பதாயும், எனவே வரலாற்று ஆசிரியர்கள், நிபுணர்கள் கொண்ட கமிட்டியை நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் சென்னை முதல்வர் பக்தவத்சலம் கூறினார்.

தமிழ்நாட்டு வரலாறு பற்றி ஆராய இத்தகைய கமிட்டி ஒன்றை நியமிக்கவேண்டும் என சட்ட சபையில் கூறப்பட்ட யோசனையை அவர் நிராகரித்த போதே இவ்வாறு அவர் கூறினார்.

## ஐ. நா. வில் சீன விவாதம் ஒரு வாரம் நீடிக்கும்

நியுயோர்க், நவ. 10

ஐ. நா. வில் சீனாவை அனுமதிக்கும் விஷயம் குறித்து பொதுச்சபையில் நேற்று தொடர்ந்து விவாதம் நடந்தது

மலகாசி பிரதிநிதி சீனப் பிரதிநிதித்துவத்தை எதிர்த்துப் பேசினார். தனது கருத்தை ஏற்காத நாடுகளில் சீனா நாசவேலை செய்துவருவதாயும், வெளியிலிருந்து ஐ. நா. வை அழிக்க முயற்சிக்கும் ஒரு நாட்டை ஐ. நா, வில் சேர்க்கமுனைவது விவேகமற்ற செயல் என்றும் அவர் கூறினார்.

அல்ஜீரியா, செக்கோஸ்லோவேகியா, சோமாரியா ஆகிய நாடுகள் சீனாவை ஆதரித்தன.

சீனாவை சேர்க்காவிட்டால் தென்கிழக்காசியாவிலும்உலகிலும் பல பெரும் பிரச்னைகளைத் தீர்ப்பது கஷ்டமாகிவிடும் என்றும் னவே இவ் விஷயத்தில் ஒரு இணக்கத்துக்கு வரும்படியும் நியூஸிலந்து பிரதிநிதி விண்ணப்பித்தார்.

சீன விவாதம் சபையில் ஒருவாரம் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அயூப் யு. எஸ். விஜயம் எப்போது?

வாஷிங்கடன், நவ. 10

அமெரிக்காவிலுள்ள பாகிஸ்தான் தூதர் வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்கைச் சந்தித்து 3 நிமிடம் பேசினார்.

இதன்பின் அவர் நிருபர்களிடம் பேசுகையில், இவ்வாரம் தாம் பாகிஸ்தான் திரும்பவிருப்பதாயும், ஆலோசனைக்காகவே செல்வதாயும் கூறினார்.

இந்தியாவின் இராணுவ பலம் எப்போதும் போல் வலிமையாகப் பெருக்கப்பட்டிருக்கிறதென்று கூறிய அவர், காஷ்மீர் பிரச்னையில் அபிவிருத்தி ஏற்படும்வரையும், ஜனாதிபதி ஜோன்ஸனின் உடல்நிலை தேறும் வரையிலும் பாகிஸ்தான் அதிபர் அயூப் அமெரிக்காவுக்கு வர முடியாது என்றார்.

## ஐஸன்ஹோவர் உடல்நிலை

வாஷிங்டன், நவ. 10

முன்னாள் ஜனாதிபதி ஜெனரல் ஐஸன்ஹோவருக்கு லேசான இருதயக்கோளாறு இருக்கிறதென்றும், அஞ்சுவதற்கு எதுவுமில்லையென்றும் அறிவிக்கப்பட்டது. பிராணவாயுஅறையில் அவர் வைக்கப்பட்டிருக்கிறார். வலி எதுவும் அவருக்கு இல்லையென்றும், குடும்பத்தினருடன் அவர் பேசிக் கொண்டிருப்பதாயும் கூறப்பட்டது.

75 வயதான ஐஸன்ஹோவர் 10 ஆண்டுகளுக்குமுன், (ஜனாதிபதியாக இருந்த போது) இருதய நோயினால் பாதிக்கப்பட்டார்.

## சௌத்ரிக்கு பத்மவிபூஷன்

புதுடில்லி, நவ. 10

ராணுவத் தலைவர் ஜெனரல் சௌத்திரிக்கும். விமானப்படைத்தலைவர் அர்ஜன் சிங்குக்கும் பத்மவிபூஷன் வழங்கப்பட்டிருக்கின்றது மற்றும் 6 இராணுவ விமானப்படை அதிகாரிகளுக்கு பத்மபூஷன் வழங்கப்பட்டிருக்கிறது.

தனிச் சிறப்புக்காக பத்மவிபூஷனும், விசேட சேவைக்காக பத்மபூஷனும் வழங்கப்படுவதாயும், இம்மாத பிற்பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் விருதுகளை வழங்குவார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## கறுப்புக் குழந்தைகள் "மக்கு"களாம்

பர்மிங்ஹாம், நவ. 10

பகிஷ்காரஇயக்கம்நடத்த வேண்டாம் என ஒரு பாடசாலைத் தலைவி 30 கோபாவேசம் கொண்ட வெள்ளைத் தாய்மார்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்தப் பாடசாலையில் பெரும்பாலும் கறுப்புமாணவர்கள் படிப்பதே இதற்குக் காரணம். 4க்கு 1 என்றவிகிதத்தில் கறுப்பு மாணவர்கள் அங்கு படிக்கிறார்கள்.

"பொறுமையாக இருங்கள். அவசரப்பட்டு எதுவும் செய்யாதீர்கள்" என இந்த பெற்றோர்களை அவர் விண்ணப்பித்தார்.

குடியேற்ற வாசிகளின் (கறுப்பர்கள்) குழந்தைகள் படிப்பில் மக்காய் இருக்கிறார்களென்றும் 14 தினங்களுக்குள் 80 சதவிகிதமான கறுப்புக் குழந்தைகளை 50 சதவிகிதத்துக்குக்குறைக்காவிட்டால் தங்கள் பிள்ளைகளை வேறுபாடசாலைகளுக்கு அனுப்பப் போவதாயும் வெள்ளைக்கார பெற்றோர்கள் பயமுறுத்தியிருக்கின்றனர்.

## லண்டனில் ஸ்ரீமதி பண்டிட்

லண்டன், நவ. 10

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் நேற்று லண்டன் வந்து சேர்ந்தார். பிரதமர் சாஸ்திரியின் விசேஷ தூதுவராக அவர் ஹாலந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கும் செல்வார்.

## தர்மகர்த்தா சபை தீர்மானம்

நியூயோர்க். நவ.10

ஆபிரிக்காவிலுள்ள பசூடோலேண்ட், சுவாஸிலேண்ட், பெச்சுவானலேண்ட் ஆகிய பிரிட்டிஷ் பிரதேசங்களுக்கு சுதந்திரம் வழங்குமாறு ஐ. நா. தர்மகர்த்தா சபைகேட்டுக் கொண்டது. தீர்மானத்திற்கு ஆதரவாக 81 வாக்குகளும் பாதகமாக ஒரு வாக்கும் கிடைத்தன.

## மகபகால் தோற்பாரா?

மணிலா, நவ. 10

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மகபகாலின் நிலை அவருடன் போட்டியிடும் செனட்டர் மார்கோஸை விட கீழ்நோக்கிச்சென்று கொண்டிருப்தாகக் கூறப்படுகிறது. 10 மாகாணங்களிலிருந்து கிடைத்த முதல் முடிவுகளின்படி செனட்டர் மார்கோஷுக்கு 4681 வாக்குகளும், திரு. மகபகாலுக்கு 3720 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

நேற்று நடைபெற்ற ஒரு கைகலப்பில் 4 பேர் கொல்லப்பட்டனர் என்றும் இதுவரை மொத்தம் 50 பேர் பிலிப்பைன்ஸ் தேர்தலில் மாண்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

ஒரு பிரதேச மேரும் முன்னாள் பொலிஸ் தலைவரும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் சுட்டுக்கொண்டு மாண்டனர்.

## ரயில் மோதி நால்வர் பலி

பாட்னா, நவ. 10

பீகாரில் பிரயாணிகள் ரயில் ஒன்று பிரயாணிகள் மீது மோதியதால் 4 பேர் செத்தனர். 5 பேர் காயமடைந்தனர்.

## சிங்கப்பூர் துணைப் பிரதமர்

புதுடில்லி, நவ. 10

சிங்கப்பூர் துணைப் பிரதமர் டோசின்சாய் நேற்று வெளிநாட்டு மந்திரி சுவர்ண்சிங்கைச் சந்தித்துப் பேசினார்.

அதற்குமுன் வெளிநாட்டு மந்திரி திரு. ராஜரத்னம் சுவர்ண்சிங்குடன் பேசினார். தென்கிழக்காசிய நிலைமை குறித்து அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள்.

## ஜடிட்வேட்டை தீவிரம்

ஜாகர்த்தா, நவ. 10

மத்தியஜாவாவில் மறைந்திருக்கும் கம்யூனிஸ்ட் தலைவர் ஐடிட்டை தேடும் முயற்சியை ராணுவம் தீவிரப்படுத்தியிருக்கிறது.

ஜாஹர்த்தாவில் யுத்த நிலைமை இப்போது நீடிக்கப்பட்டிருப்பதுடன், ஊரடங்கு உத்தரவும் தளர்த்தப்பட்டிருக்கிறது.

## நேரு நினைவுக்கு 10 ரூ. முத்திரை

புதுடில்லி, நவ. 10

நேருவின் பிறந்த திருநாளான வருகிற 14-ந்திகதி 10 ரூபாய் முத்திரை ஒன்று வெளியிடப்படும்.

## இந்தோனேஷிய-பாக். கடற்படை ஒத்திகை

கராச்சி, நவ. 10

இந்தோனேஷிய கடற்படைக் கப்பல்கள் பாகிஸ்தான் கடற்படையுடன்சேர்ந்து ஒத்திகை நடத்தும் பொருட்டு இங்கு வந்துள்ளன.

மத்திய, தனியார் பாடசாலைகளை

# பல்கலைக்கழகத்துடன் இணைக்க வேண்டும்

## ஆசிரியர் சங்க மகாநாட்டில் தலைமையுரை

பம்பலப்பிட்டி, புதன் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைதீர்த்து, கூடிய மாணவர்களுக்குக் கல்விவசதியளிக்க தக்க வழிஒன்று உண்டு. பல்கலைக் கழகப் பரீட்சைக்கு தயார் செய்யக்கூடிய இடவசதியும், உபகரண வசதியும் உள்ள மத்திய, தனிப்பட்ட பாடசாலைகளை பல்கலைக்கழகத்துடன் இணைத்து, அவற்றில் மாணவர்களைகல்விபயில வகைசெய்யலாம். லண்டன் பல்கலைக்கழக பரீட்சைகளுக்கு மாணவர்களைத்தயார் செய்த அனுபவம் பல கல்லூரிகளுக்குண்டு. ஆதலால் இந்தப்பணி அவர்களுக்குக் கஷ்டமாயிருக்காது. எனவே இப்போதைய பல்கலைக்கழக இடநெருக்கடியைத் தீர்க்க சிறந்தவழிஇதுவேயாகும்.''

இவ்வாறு கொழும்பு ஆசிரியர்சங்கத்தின் 45-வது வருடாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம்6-ம் திகதி கொழும்பு சென்ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றபோது சங்கத்தலைவி செல்வி என். காசிப்பிள்ளை தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

செல்வி காசிப்பிள்ளை தமது தலைமையுரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

### மொழிபெயர்ப்பு

இப்பொழுது வெளியிடப்படும் மொழி பெயர்ப்பு பாடப்புத்தகங்கள் பலவற்றில் உள்ளவற்றை மாணவர்கள் இலகுவில் விளங்கிக் கொள்ளமுடியாது கஷ்டப்படுகிருர்கள். 'பண்டித' மொழியில் இப்புத்தகங்கள் எழுதப்படுவதால், சாதாரண மொழியில் தேர்ச்சியுடைய மாணவர்களால் இவற்றை விளங்கிக் கொள்ள முடியவில்லை. இதனுல் பெருந்தொகையான பணத்தை செலவிட்டுவெளியிடப்படும் மொழிபெயர்ப்புநூல்கள் ...க்க பயனை அளிக்கத்தவறுகின்றன. பாடநூல்கள் மொழிபெயர்ப்பு விஷயத்தில் ஆசிரியர் சங்கங்கள் கவனம் எடுக்க வேண்டும். மொழிபெயர்ப்பு நூல்களில் உள்ள குறைபாடுகளைக் கண்டுபிடித்து, அவற்றைநிவர்த்திபதற்கான சிபார்சுகளை செய்யக்கூடிய தகுதி வாய்ந்த குழுக்களை பல இடங்களிலும் நிறுவ ஆசிரியர் சங்கங்கள் முயற்சிக்க வேண்டும். பாடநூல்களை எழுதும் தனிப்பட்டவர்களும் கல்வி வளர்ச்சிக்கு வேண்டிய பணிபுரிய முடியும் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

### தனியார் பாடசாலைகள்

தனியார் பாடசாலைகள் தங்கள் முயற்சியில் இதுவரை வெற்றியடைய முடியவில்லைஎன்றேசொல்லவேண்டும். தனியார் பாடசாலைகளை அங்கீகரித்தால், தனியார்-அரசாங்க பாடசாலைகளுக்கிடையே ஏற்படும் கல்விப் போட்டி நாட்டின் கல்வித்தரத்தை வளர்க்கும் என்பதில் ஐயமில்லை. தனியார் பாடசாலைகளிலும் இந்த நாட்டின் வருங்காலப் பிரஜைகளே கல்வி பயில்கிருர்கள். கல்வி வசதி சகல மக்களுக்கும் அளிக்கப்பட வேண்டியது அவசியம். போதிக்கப்படும் கல்விக்காக நியாயமான அளவு பணம் அறவிடுவது நீதியற்ற செயலல்ல.

## சீனி கார்ப்பரேஷன் புதியதலைவர்

கொழும்பு, புதன் ஸ்ரீலங்கா சீனி கார்ப்பரேஷனின் தலைவராக முன்னுள் மந்திரி திரு. மகாநாம சமரவீரா நியமிக்கப்பட்டுள்ளார். மந்திரி திரு. சி.பி.டி' சில்வா இந்த நியமனத்தை செய்தார்.

## கோப்பாய் கி. ச. புதிய தலைவர்

யாழ்ப்பாணம், புதன் கோப்பாய் கிராமசபைத் தலைவராக அட்வகேட் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

முன்னுள் கிராம சபைத் தலைவர் திரு. ரி. சின்னத்துரையின் ராஜினுமாவைத் தொடர்ந்து தலைவர் பதவி காலியாகவிருந்தது.

திரு. சண்முகநாதனின் பெயரை திரு. வி. உலகநாதன் பிரேரிக்க, திரு. தர்மலிங்கம் அனுவதித்தார்.

## மதுபோதைக்கு ஒரு மாதச் சிறை

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் மதுபோதையிலிருந்ததாகக் குற்றஞ்சாட்டி, வி கணபதிப்பிள்ளை என்பவர் மீது யாழ்ப்பாணம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் ஒரு மாதக் கடுழியத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

## இடமிருந்தும் ஆளில்லை!

வெள்ளவத்தை, புதன் அரசகரும மொழித் திணைக்களத்தில் தமிழ் மொழி பெயர்ப்பாளருக்கான பல பதவிகள் காலியாகவிருப்பதாக அறியப்படுகிறது.

எட்டுத் தமிழ் மொழி பெர்ப்பாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர் எனத் திணைக்களம் திறைசேரிக்கு விண்ணப்பித்துப் பல மாதங்களாகிவிட்டபோதிலும் திறைசேரியிலிருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லை எனத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் குறிம்பிட்டார்.

## பென்ஷன் திட்டம்

பம்பலப்பிட்டி, புதன் கூட்டு ஸ்தாபனங்களில் வேலைசெய்யும் அரசாங்க ஊழியர்களுக்கு ஒரு பொது பென்சன் திட்டம் உருவாக்கப்படவேண்டுமென அரசாங்க பின் ஆசன அங்கத்தினர்கள் கருத்துத்தெரிவித்துள்ளார்கள். இதற்கான பிரேரணையை அரசாங்க பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் அக்குறணை இரண்டாவது பாராளுமன்ற அங்கத்தவர் திரு. ஏ. சி. எஸ். ஹமீத் கொண்டுவருவார் எனத் தெரியவருகிறது.

## நாடகமன்றத்துக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், வியா. இலங்கைக் கலைக் கழகத் தமிழ் நாடகக் குழுவினரால் நடத்தப்பட்ட நாடகவிழாவில் 'கண்டியரசன்' நாடகத்தை நடித்து 'அண்ணுவி மரபு' முறை நாடகத்தில் முதற்பரிசுபெற்ற பாஷையூர் வளர்பிறை நாடக மன்றக் கலைஞர்களைக் கௌரவிக்குமுகமாகப் பாஷையூர் புனித அந்தோனியார் சனசமூக நிலைய மண்டபத்தில் பாராட்டு வைபவமொன்று நடைபெற்றது.

இவ்வைபவத்துக்கு திரு. ஜி. ஜே. செபஸ்தியாம்பிள்ளை ஜே.பி. தலைமைதாங்கினுர். கலையரசு சொர்ணலிங்கம், திரு. தேவகடாட்சம், யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. ஜே. எஸ். அழகையா, திரு. ஜி. எம். ஆர். மகாராசா முதலியோர் கலைஞர்களைப் பாராட்டிப் பேசினர். நாடக மன்றத்தின் சார்பில் திரு. பாஷையூர்ஆரம் நன்றி கூறினுர்.

## விசாரணைப் பகுதியில் தொலைபேசி இல்லை

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாண் அரசாங்க அதிபர் செயலகத்தில் பொதுமக்களுக்கு தகவல்கள் கொடுக்கும் விசாரணைப் பகுதிக்கும் மறு கிளைகளுக்கும் தொலைபேசி வசதிகள் இல்லாததால் அங்கே வேலைசெய்யும் உத்தியோகத்தர்கள் சில சமயங்களில் கஷ்டப்படவேண்டிருக்கின்றது.

நேற்று முன்தினம் வானெலிக்கமிஷனர்கள் செயலகத்தில் வந்திறங்கியதும் தலைமைக் காரியாலய காரியாதிகாரி இருக்கிருரா என்று விசாரணைப் பகுதியிலிருந்த உத்தியோகத்தரிடம்கேட்டபொழுது அவர் மேசையில் தொலைபேசி வசதியில்லாததால் அவர் மேல்மாடிக்கு ஒடோடிச் சென்று அக்காரியாதிகாரியை கூட்டிக் கொண்டுவரவேண்டிருந்தது.

## தேர்தல் ஆட்சேப மனு வாபஸ்

பம்பலப்பிட்டி, புதன் கொலன்னுவா எம். பி. திரு. டி. எஸ். சமரசிங்கா பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதை ஆட்சேபித்து, திருமதி குசும குணவர்த்தன தொடர்ந்திருந்த வழக்கு நீதியரசர் திரு. எஸ். பெர்னுண்டோ முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதியரசரின் அனுமதியுடன், தாம் தொடர்ந்திருந்த வழக்கை திருமதி குணவர்த்தன வாபஸ்பெற்றுக்கொண்டார்.

## நியமனம்

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. மு. பொன்னம்பலம் (60) யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோர்ட்டில் சத்தியப்பிரமானம் செய்து, மொழி பெயர்ப்பாளராக நியமனம் பெற்றுள்ளார்.

இவர் யாழ். பிரதேச வனபரிபாலனராக கடமையாற்றி இளைப்பாறியுள்ளார்.

## கவனிக்கப்படுமென வாக்குறுதி

பம்பலப்பிட்டி, புதன் வட-கீழ் மாகாணங்களிலுள்ளஇராணுவத்தினருக்கு பொலிசாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நம்பர் போன்ற, நம்பர் அடையாளப் பட்டிகள் கொடுக்கப்படவேண்டுமென்று பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு கே. துரைரத்தினம் பாதுகாப்பு வெளிநாட்டு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்குச் சமர்ப்பித்த ஆலோசனையைக் கவனித்துப் பரிசிலனை செய்வதாக நிரந்தரக் காரியதரிசி உறுதியளித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

## சங்கங்களுக்கு கடன் உதவி

பம்பலப்பிட்டி, புதன் உரம் முதலியவற்றைச் சேமித்துவைப்பதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய சேமிப்புக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசாங்கம் கடனுதவி கொடுத்துதவுமெனத்தெரியவருகிறது.

இப்பண உதவி மூலம் காணி வாங்கி வேண்டிய கட்டடங்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் கட்டலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'கூடுதலாக உற்பத்திசெய்க'

பம்பலப்பிட்டி, புதன் சீனு ஆர். எஸ். எஸ். ரப்பருக்கு ஐந்து சதம் கூடுதலாகக் கொடுக்க ஒப்புக்கொண்டதன் காரணமாக ஆர். எஸ். எஸ். ரப்பரை கூடிய அளவிற்கு மேலதிகமாக உற்பத்தி செய்யும்படி வர்த்தக மந்திரி டாக்டர் எம். வி. பி.பீரிஸ் எல்லா ரப்பர் உற்பத்தியாளர்களையும் கேட்டுள்ளார்.


பூட்டுகள், ஆமைப் பூட்டுகளின் இறக்குமதியாளர்கள்

YALE
'யேல்'
பூட்டுகள் நீங்கள் கொடுக்கும் பணத்துக்கு பெறுமதியானதாக இருக்கும்
என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.
விசாரணைகளுக்கு:
ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்,
விற்பனைப் பகுதி
மகாராஜா பில்டிங்,
பாங்ஷால் வீதி, கொழும்பு-11
தொலைபேசி எண்: 3603
3634






நீல்வாதம், சளுக்கு, தசைவலி, நரம்புவலி, மார்ச்சவலி, பல் வலி முதலிய உபாதைகளுக்கு இணையற்ற நிவாரணி.

தயாரிப்பாளர்கள் :
விட்டில்ஸ் ஓரியண்டல் பாம் &
பார்மஸிடிக்கல்ஸ் லிமிடெட்.,
மதராஸ்—2, இந்தியா.
சரும வியாதிகளுக்கு நிவாரணியான ஜெர்மெக்ஸ் தயாரிப்பவர்கள்

ஸோல் ஏஜெண்டுகள் :
A. V. R. A. & கம்பெனி,
தபால் பெட்டி எண் 711.
கொழும்பு—11.

''கல்கத்தாவிலுள்ள கெமிகல்ஸ் அண்ட் அலைட் ப்ராடக்ட்ஸ் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சிலால் வெளியிடப்பட்டது.''

## விளம்பரம்

### மானிப்பாய் இந்துக் கல்லூரி

**கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புக்கள்**

(போதனு மொழி- ஆங்கிலம்/தமிழ்)

மேற்படி வகுப்புக்களில் சேர விரும்பும் மாணவர்கள், 30-11-65-க்கு முன் அதிபர், இந்துக் கல்லூரி, மானிப்பாய் என்ற முகவரிக்கு உரிய விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பிக்க.

அதிபர்,
இந்துக்கல்லூரி,
மானிப்பாய்.
1245

### காங்கேசன்துறை பட்டினசபை

### வேலை விளம்பரம்

காங்கேசன்துறை பட்டின சபைத் தலைவரால் பட்டினசபை நகரசுத்தித் தொழிலாளர்களின் வீடமைப்புத் திட்டத்திற்கு வீடுகள் கட்டுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் பத்திரங்கள் மேற்படி பட்டினசபை அலுவலகத்தில் 12-11-65-ந் திகதி நடுப்பகல் 12 மணி வரை நன்னம்பிக்கைப்பணமாக ரூபா 100/- கட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் பத்திரங்கள் இணைப்பிரதியுடையதாக இருபிரதிகளும் 1965-ம் ஆண்டு நவம்பர் (கார்த்திகை) 13-ந்திகதி நடுப்பகல் 12 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பட்டின சபை, அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் பெட்டியிலோ அல்லது பதிவு செய்த தபால் மூலமாகவோ அனுப்பப்படல் வேண்டும்.

மேற்கொண்டு விபரங்கள் யாவும் பட்டினசபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
காங்கேசன்துறை, பட்டின சபை.
பட்டினசபை அலுவலகம்,
காங்கேசன்துறை,
6-11-1965. 1246

### ஓர் அறிவித்தல்

தெல்லிப்பழை உழுகுடைப்பதித் துர்க்கா தேவியின் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு சமீபத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றிருப்பதால், திருப்பணிச்சபையின் வரவு செலவுக் கணக்குகளைப் பார்வையிட்டு பதிப்பித்து வெளியிடும்வரை, கோவில் திருப்பணிக்கு மேலும் பணம் சேர்க்கப்படாதென, திருப்பணிச்சபையினரும் தர்மகர்த்தாச் சபையினரும் ஏகமனதாகத் தீர்மானித்திருப்பதால், அன்பர்கள் யாவரையும் எங்கள் சபையின் விசேட அறிவித்தலின்றி திருப்பணிக்காக பணம் கொடுக்க வேண்டாமென கேட்டுக் கொள்ளுகிறோம்.

மேற்படி கோவில் திருப்பணிக்கென எவராவது பணம் சேர்த்தவர்கள், அப்பணத்தைத் தயவு செய்து திருப்பணிச்சபைதனதிகாரி, திரு. தி ஆறுமுகசுவாமியிடம் இவ்வாண்டு நவம்பர் மாதம் 30-ந் திகதிக்கு (30-11-65) முன்னதாகக் கொடுத்து பற்றுச்சிட்டு பெற்றுக்கொள்ளவும்.

வ. சுப்பிரமணியம்
காரியதரிசி,
தர்மகர்த்தாசபை,
தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில்.
தெல்லிப்பழை,
9-11-65.
1247


# "பஞ்சத்தை ஒழிப்பதில் மாணவர் முன்னிற்க வேண்டும்"

## களைபிடுங்கு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், வியா.

"ஈழ்த்திரு நாட்டின்சரித்திரத்தை ஒருமுறை புரடிப் பார்ப்போமேயானுல், முன்னொரு காலத்தில் வெளிநாடுகளுக்கு பொருட்களை இங்கிருந்து ஏற்றுமதி செய்த வரலாற்றினை காணக்கூடியதாகவிருக்கும், ஆனுல் இன்று சாதாரணமாக நாமே தயாரிக்கக் கூடிய சில்லறை உணவுப் பொருட்களைக்கூட இறக்குமதி செய்ய வேண்டிய மந்த நிலையில் இருக்கிறோம். குன்றிய நிலையிலிருக்கும் நமது உணவு உற்பத்தியைப் பெருக்கும் பெரும் பணியில் இந்நாட்டு பாடசாலை மாணவர்கள் முன்னிற்க வேண்டும்."

யாழ்ப்பாணம் பாடசாலை மாணவர்கள் முன்னிலையில் கொழும்பு ரோயல் கல்லூரி அதிபர் திரு. டட்லி டி. சில்வா பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நெல்வயல்களில் களை பிடுங்கி உணவுஉற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் திட்டத்தின்கீழ். அரியாலை பயிர்ச் செய்கைக் குழுவின் ஆதரவில் அரியாலை நெல்வயல் வெளியில் யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர்களுடைய களை பிடுங்கும் இயக்கம் நேற்றுக் காலை ஆரம்பமாகியது. இவ்வியக்கம் ஆரம்பமாவதற்கு முன்னர் பாடசாலை மாணவர்கள் யாழ்ப்பாணப்பகுதி காரியாதிகாரி கந்தோரில் கூடினுர்கள். அப்போது திரு. டட்லி டி. சில்வா மேலும் பேசுகையில், மாணவர்களுக்கான களைபிடுங்கும் இயக்கத்தை ரோயல்கல்லூரியே முதலில் ஆரம்பித்துவைத்ததென்றும்கொழும்பிலிருந்து 10 மைல் தூரத்துக்கு அப்பால் சென்று தங்கள் கல்லூரி மாணவர்கள் களை பிடுங்கினுர்கள் என்றும் சொன்னுர்.

யாழ்ப்பாண உதவி அரசாங்கஅதிபர் திரு. ஏ. பெருமையினுர் இயக்கத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறியதாவது:

யாழ். நகர மாணவர்கள் எல்லோரையும் இந்தக்களை பிடுங்கும் இயக்கத்தில் முழு உற்சாகத்தோடும் ஈடுபட வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன். மாணவர்கள் இப்படியான சேவையில் ஈடுபடுவது தேசத்துக்குச்செய்யும் பெரிய தொண்டாகும். பஞ்சத்தோடு போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் இந்த வேளையில் மாணவர்கள் உணவு உற்பத்தியைப் பெருக்கக்கூடிய இந்த நல்ல பணியைச் செய்வது பாராட்ட வேண்டியதொன்றே.

தன்னுடைய உணவை உற்பத்தி செய்யத்தெரியாத மாணவனும், உணவைச் சமைக்கத் தெரியாத மாணவியும் எதைத்தான் படித்தாலும் கல்வியில் பூரணத்துவம்பெருதவர்கள் என்றே இவர்களைச் சொல்லவேண்டும். தனிய 'புத்தகப்பூச்சிகளாக மட்டும் இராமல் உங்கள் நாட்டுக்கும் உங்களுக்கும் பிரயோசனமுள்ளவர்களாக நீங்கள் திகழவேண்டும்

யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. எஸ். சிவஞானம் வரவேற்புரை நிகழ்த்தினுர்.

சுமார் 650 பாடசாலை மாணவர்கள் கமத்தொழில் பற்றிய அழகான சுலோக அட்டைகளை ஏந்திய வண்ணம் இரண்டு மைல் தூரத்துக்கு ஊர்வலமாகச் சென்னர். அரியாலை கமத்தொழில் குழுதலைவர் திரு. சின்னத்துரை ஊர்வலத்தை அரியாலை வயல் மத்தியில் வைத்து முறைப்படி தேங்காய் உடைத்து வரவேற்ருர்.

உதவி அரசாங்க அதிபர் திரு. பெருமையினுர் தேசியக்கொடியைப் பறக்கவிட்டதைத் தொடர்ந்து களை பிடுங்கும் இயக்கம் ஆரம்பமானது சுமார் 10 ஏக்கர் வயலில் இன்றுவரை மாணவர்கள் களை பிடுங்குவார்களென தெரிவிக்கப்பட்டுள்ளது.


யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, ஸ்ரான்லி கல்லூரி, சென். ஜேம்ஸ் மகாவித்தியாலம், கொழும்புத்துறை ஆர். சி. பாடசாலை, கொழும்புத்துறை மகாவித்தியாலயம், ஸ்ரீபார்வதி வித்தியாலயம், சிவிலியா தெரு பாடசாலை, நாயன்மார்க்கெட்டு மகேஸ்வரி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் களைபிடுங்கும் இவ்வியக்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகத்தின் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றபோது புதிய நிர்வாகஸ்தர்களாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஜீ. எம். ஆர். மகாராசா, உபதலைவர் கள்: திருவாளர்கள் எல். பி பிலிப் (மீன்பிடி அத்தியட்சகர்), பி. அந்தோனிப்பிள்ளை, இணைச்செயலாளர்கள்: திருவாளர்கள் எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை, ஏ. பாலதாஸ், பொருளாளர்: திரு. டி. அந்தோனிப்பிள்ளை, போஷகர்கள்: திருவாளர்கள் ஜீ. ஜே. செபஸ்தியாம்பிள்ளை ஜே. பி; ஜே. எஸ். அழகையா யாழ். மாநகரசபை அங்கத்தவர், டாக்டர் வி. துரைச்சாமி, டைரக்டர்: ஜி. எஸ். சிங்கம்.




## கொழும்பு

### வியாழன் 11 - 11 - 65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 படப்பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 தமிழோடிசைப் பாடல், 7-00 விமர்சனம், 7-15 வயலின், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 நேர்விருப்பம், 10-00 குரல் வகை.


## வரி விளம்பரம்

### தேவை

ஒப்பந்த முறையில் கொழும்பில் வேலை செய்வதற்கு புல்டோசர் சாரதிகள் தேவை. விண்ணப்பதாரர்கள் காசுப்பிணை கட்ட வேண்டும். விண்ணப்பிக்கவும். ஜவ்வர்ஜி பிறதர்ஸ், 150, சென்ற் யோசெப்ஸ் வீதி, கிருன்ட்பாஸ். 1361

கொழும்பில் வேலை செய்வதற்கு புல்டோசர்கள், லோடர்கள், ட்றைக்ரர்கள் மெக்கானிக்குகள் தேவை. காசுப்பிணை தேவை. விண்ணப்பிக்கவும். ஜவ்வர்ஜி பிறதர்ஸ், 150, சென்ற் யோசெப்ஸ் வீதி, கிருன்ட்பாஸ். 1362

ஒப்பந்த முறையில் கொழும்பில் வேலை செய்வதற்கு ட்ராக்ரர் சாரதிகள் விவசாய ட்ராக்டர்கள் மூலம் மண் ஏற்றுமதி செய்வதற்கு தேவை. விண்ணப்பகாரர்கள் லொறிகளும், வாகனுதிகளும் செலுத்துவதற்குரிய லைசென்ஸ் உடையவர்களாயும், காசுப்பிணை கட்டக்கூடிய நிலையில் உள்ளவர்களாயும் இருத்தல் வேண்டும். விண்ணப்பிக்கவும். ஜவ்வர்ஜி பிறதர்ஸ், 150, சென்ற் யோசெப்ஸ் வீதி, கிருன்ட்பாஸ். 1363

### WANTED

Representatives wanted, no security, good salary, call personally or write. Murugaiah opposite National Museum, 'affna. 1365


## நாட்டிலும் நகரிலும்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தைக்கொண்டு திருத்தங்கள் செய்யலாம். எவ்வளவோ பணம் செலவழித்து தூரமான இடங்களிலிருந்து வருபவர்கள் பத்து சதம் கொடுப்பதற்குத் தயங்க மாட்டார்களென்றே நம்புகிறேன்.

கீரிமலை போன்ற புனிதமான இடங்களைச் சுத்தமாகவும் கவர்ச்சிகரமாகவும் வைத்திருக்கவேண்டும்—வைத்திருக்க வேண்டியது எமது தேசகடமை என்ற உணர்ச்சி எமது பொதுமக்களிடையே வேரூன்றி வளரும் அளவுக்கு அவர்களிடையே குடிமையுணர்ச்சி இல்லாதது வேதனைகொடுக்கிறது. செல்வச்சன்னதி, மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் மூன்றிலும் கியாதிவாய்ந்தது. நம்மெல்லோராலும் போற்றப்படும் க்ஷேத்திரம். இங்கே தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் தீர்த்தமாடும் நீரோடைக் கரையில் அசுத்தம் இருப்பதைக் கண்டபொழுது சன்னதியான்தான் இந்தப் பாபிகளுக்கு நற்புத்தி புகட்ட வேண்டுமென்று வணங்கிக் கொண்டேன். நம்முடைய கந்தன், நம்முடைய ஸ்தலம், நமக்கு அது பெருமை தருவது, நாம் அதைச் சுத்தமாகவும் புனிதமாகவும் வைத்துக்கொள்ளவேண்டும் நமக்கு அதனுல் பலனுண்டு—என்ற குடிமையுணர்ச்சி இன்னும் நமது மக்களிடையே பரவவில்லை. ரயில் பெட்டிகளில் தண்ணீர்க் குழாய்களையும், பல்புகளையும் திருடுவது, பஸ்களில் உள்ள மெத்தை ஆசனங்களை பிளேட்டால் கீறுவது, தெருவிளக்கை கல்லால் எறிந்து உடைப்பது, மலசல கூடங்கள் இருந்தாலும் அவற்றை உபயோகிக்காமல் வீதிகளை அசுத்தம்செய்வது—இவையெல்லாம் குடிமையுணர்ச்சி இல்லாதவர்களின் செயல்கள்.

'ஒழுக்கமும் வாய்மையும்
நாணும் இம்மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந்தார்.'

--"வழிப்போக்கன்"


### விற்பனைக்கு

கண்டியிலிருந்து 26 மைல் தூரத்தில் 4000 அடி உயரத்தில் ஸ்டோர், பங்களாவுடன் சகல வசதிகளையும் கொண்ட பயிர் செய்யப்பட்ட 350 ஏக்கர் தேயிலைத் **தோட்டம் விற்பனைக்குண்டு.** மூலதனமுள்ளவர்கள் எழுத்து மூலம் தொடர்பு கொள்க. விளம்பர இல: 1364 C/o 'ஈழநாடு' த. பெ. எண்: 49, யாழ்ப்பாணம். 1364

### வைத்தியம்

**தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


## களைபிடுங்கு விழா

பரந்தன், புதன்

கிளிநொச்சிப்பகுதி பாடசாலை மாணவர்களின் களை பிடுங்கும்விழா இன்று முரசுமோட்டை முருகானந்த சைவவித்தியாசாலையில் ஆரம்பமாகியது.

கரைச்சிப்பகுதி காரியாதிகாரி திரு. ஏச். ஈ. பிள்ளைநாயகத்தின் ஏற்பாட்டைத் தொடர்ந்து இவ்விழா இங்கு நடைபெறுகிறது.

இவ்விழாவில் கிளிநொச்சி புனிததிரேசா வித்தியாலயம், உருத்திரபுரம் மகா வித்தியாலயம், பரந்தன் வித்தியாலயம், இந்துதமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் கலந்துகொள்கின்றன.

## 1000 ரூபா அபராதம்

களுத்துறை, புதன்

பாலுணவைகட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க கூட்டி விற்றதற்காக செய்யது அலி என்பவருக்கு களுத்துறை மாஜிஸ்திரேட் திரு. அரசுவாலடன் 1000 ரூபா அபராதம் விதித்தார்.

## சட்டவிரோத ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிப்பாளருக்கும் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பியுள்ளார். இதன் பிரதி ஒன்று கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் நிறுவப்பட்ட கமத்தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினர்களுடைய படங்களைக்கொண்ட உறுப்புரிமை அட்டைகள் வழங்க ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதென்றும், இச்சங்கத்தில் சேர்ந்தவர்கள் எல்லோருக்கும் அரிசிப் பங்கீட்டரிசிப் புத்தகங்கள் வைத்திருக்கிருர்கள் என்றும் இவர்கள் பற்றிய சந்தேகங்கள் ஏற்பட்டால் சங்க உத்தியோகத்தர்களுடன்தொடர்புகொள்ளவேண்டும் என்றும் திரு. கா. பொ. இரத்தினம் உதவிப்பொலிஸ்கண்காணிப்பாளரிடம் தெரிவித்தார்.

கிளிநொச்சிப் பகுதியில் பிரஜாவுரிமை பெற்றுத்தருவதாகக் கூறிச் சிலர் பணம் பறிக்க முயன்றுவருகின்றனர் என்ற புகாரையும் திரு இரத்தினம் பொலிஸாரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இதுசம்பந்தமாகக் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்துடனும், பொலிஸ் பகுதியுடனும் நடவடிக்கைகள் எடுப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரியவருகிறது.

# ஆனைக்கோட்டை பொலிஸாரின் 'வேட்டை'

ஆனைக்கோட்டை, செவ். ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள ஒரு கரேஜிலிருந்து திருட்டுப்போன ஒரு ''ஒட்டும் கருவி''யை பொலிஸார் தந்திரமாகக் கைப்பற்றியுள்ளனர்.

ஒட்டுவதற்கு பயன்படுத்தப்படும் பெறுமதிவாய்ந்த ''வெல்டிங்'' கருவியொன்று திருட்டுப் போய்விட்டதாகஆனைக்கோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸாருக்கு கிடைத்த சில இரகசிய தகவல்களைக் கொண்டு ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜண்ட் வி. வீரபாகுவும் பொலிஸ் கான்ஸ்டபிள் மெண்டிஸும்யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றனர். கொழும்புக்குச் செல்லும் 'கடுகதி' ரயில் யாழ். ரயில் நிலையத்தை விட்டுப் புறப்படும் பொழுது இருவர் ஓடோடி வந்து ரயிலில் ஏறியதாகவும் அப்பொழுது அங்கு காத்திருந்த 2பொலிஸாரும் 'லபக்' என்று அவர்களைப் பிடித்ததாகவும் கூறுப்படுகிறது.

முதலில் ரயிலில் ஏறிய ஸ்ரீபால என்பவரை சோதனையிட்ட பொழுது திருட்டுப்போன பொருள் அவர் வைத்திருந்த பார்ஸலில் இருந்ததாம். வெல்லம்பிட்டியைச் சேர்ந்த ஸ்ரீபாலாவும் பாணந்துறையைச் சேர்ந்த சிம்ஸனும் இது சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 16-ம் திகதி கோர்டில் ஆஜர் செய்யப்படுவர்.

## வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம், புதன் நல்லூர்கந்தசுவாமிகோவிலுக்கு வழிபடச்சென்ற 85 வயதான முருகன் சின்னையா என்பவர் கோவிலுக்கருகில் மரணமானுர்.

காலஞ்சென்றவருக்கு, சொந்தக்காரர்கள் இல்லையென்றும், அவர் வழக்கமாக காலை 10 மணிக்கு கோவிலுக்கு வழிபடச் சென்று 2 மணிக்கு திரும்புவதாகவும் நேற்றுக் காலை கோவிலுக்குச் சென்றவர் திரும்பி வராததால், அவரைத் தேடிச்சென்ற ஆறுமுகம்குழந்தை என்பவர் கோவிலுக்கு அருகேயுள்ள மலசல கூடத்தில் இறந்து கிடக்கக் காணப்பட்டார் என்றும்மரணவிசாரணையின் போது கூறப்பட்டது.

மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு ஏ. அமிர்தலிங்கம்பிரேத பரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்டார்,


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

விஜயா மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு)

தீவொளி (நுவரேலியா) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2, 6, 9-30 மணிக்கு

தென்னுட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

''நான் ஆணையிட்டால்—அது நடந்துவிட்டால்—இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்''

எம். ஜி ஆர். — சரோஜாதேவி

(இருவேடங்களில்)

ரங்காராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி

நடித்த



விஜயா கம்பைன்ஸ்

எங்கவீட்டுப் பிள்ளை

(ஈஸ்மென்கலர்)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கடைசி செய்திகள்

### பத்தரைலட்சம் பேர் ஆர்ப்பாட்டம்

இந்தோனேஷிய தலைநகர் ஜாகர்த்தாவில்கம்யூனிஸ்ட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் உச்சக்கட்டத்தை அடைந்தது. பத்தரைலட்சம் மக்கள் கம்யூனிஸ்ட் கட்சியை'' தடைசெய்யுமாறு கோரி இன்றுஆர்ப்பாட்டம் செய்தனர்.

### 400 பேர் பலி

சைகோனின் வடகிழக்கே நேற்றும் இன்றும் வியட்காங் கொரில்லாக்களுக்கும் அமெரிக்க ஆஸ்திரேலிய துருப்புகளுக்குமிடையே ஏற்பட்ட சண்டையில் 400 வியட்காங் கொரில்லாக்கள் மாண்டனர். அமெரிக்க தரப்பிலும் அதிக சேதமாம்,

### கனடா தேர்தல்

கனடா பொதுத்தேர்தலில் ஆளும் கட்சித் தலைவரான லெஸ்டர்பியர்ஸன் வெற்றி பெற்றிருக்கிறார். ஆனல் இவரது கட்சிக்கு பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை.

## யாழ். மாநகரசபை இடைத் தேர்தல்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவர் திரு பீட்டர் சோமசுந்தரம் தமது பதவியை ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து காலியாகவிருக்கும் யாழ்ப்பாணம் 15-ம் வட்டாரத்தின் (சுண்டிக்குழி) இடைத்தேர்தலுக்கு அபேட்சகர்கள் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்யும் தினம் இம்மாதம் 25ம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. நியமனப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் தேர்தல் கந்தோரில் தேர்தல் அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

## விமானத்துள் தண்ணீர்

காங்கேசன்துறை, செவ். இன்று காலை இரத்மலானையிலிருந்து பலாலிக்கு வந்த 'டகோடா' விமானத்திற்குள் கதவடைப்பிலுள்ள இடைவழியாக மழைநீர்உள்ளேவந்தபோது விமானப்பணிப் பெண் போர்வையொன்றினுல் தண்ணீர் வருவதைத் தடுத்தார்.

இதே விமானத்தில் வானெலி கமிஷன் அங்கத்தவர்களிருவர் வந்துகொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்துக்குச் சமீபத்தில் விமானம் வந்த போது மழை பொழியஆரம்பித்ததாகவும், அதன்காரணமாக விமானத்திற்குள் தண்ணீர் வடுவதை அவதானித்த பணிப்பெண், தண்ணீர் வடுவதை தடுத்ததாகவும் கூறப்படுகிறது.

30 பிரயாணிகள் பிரயாணம் செய்த இந்த விமானத்தில் ஒரு பிரயாணி மழை நீரால் நன்கு நனைந்தது குறிப்பிடத்தக்கது.

## 'ஈழநாடு' சூருவளிநிதி

யாழ்ப்பாணம், புதன் ஈழநாடு சூருவளி நிவாரணநிதி மாதஉதவித் திட்டத்தின்கீழ் நெல்லியடியைச் சேர்ந்த ஓரன்பர் இம்மாகப் பணத்தை அனுப்பி வைத்துள்ளார்.


REGAL—JAFFNA
NOW SHOWING!

ORIENT
By
NIGHT
(Cinemas ope)


## வானெலி நிலையம் . . . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் சரியான நேரத்தில் கிடைக்காயல் தாமதித்துக் கிடைப்பதாகவும் திரு.பரம்தில்லைராசா கூறினுர்.

### யாழ்ப்பாணத் தமிழ்

தான் இந்தியாவில்இருந்தபொழுது யாழ்ப்பாணத்தமிழையிட்டு பெருமையடைந்ததாக வண. ஹெட்டிமுல வஜிர புத்ததேரோ ஒரு சந்தர்ப்பத்தில் கூறினுர்.

ஆங்கில நிகழ்ச்சிகளை உலகின் பல நாடுகளிலிருந்தும் கேட்க முடியுமென்றும் அந்நேரத்தை வேறு நிகழ்ச்சிகளுக்கு ஒதுக்கலாமென்றும் முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்பட்ட நிகழ்ச்சிகளை வேறு மீட்டர்களில் போட்டால் பயனுண்டென்றும் தெரிவிக்கப்பட்டது.

இரவு 6 மணிமுதல் 8மணிவரை தமிழுக்கும், 8 மணிமுதல் 9 மணிவரை முஸ்லிம்களுக்கும் நிகழ்ச்சி ஒதுக்குவதுபற்றிக் கேட்கபபட்டபோது அப்படியும் செய்யலாம் எனத் தெரிவித்தார்கள்.

குழந்தைகள் அதிகமாகச் சிறுவர் நிகழ்ச்சிகளையே கேட்க விரும்புகிறுர்கள் என்று திரு. பரம் தில்லைராஜா கூறினுர்.

வாய்ப்பாட்டுக் கச்சேரி செய்யும் கலைஞர்களுக்கு ஒரு மணிநேரம் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் இந்நேரம் போதாதென்றும், அதிகநேரம் ஒதுக்கவேண்டுமென்றும் திரு. பரம் தில்லைராஜா கூறியபொழுது ''வானெலியைக் கேட்டுக் கொண்டிருப்பவர்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்'' எனக் கமிஷன் அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

இதன்பின் உருத்திரபுரம் ஜெயந்திநகர் கிராமமுன்னேற்றச்சங்கத்தலைவர்திரு. ரி. நல்லதம்பி, திரு. கே. குலசிங்கம், திரு. எஸ். யோகலிங்கம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

கிளிநொச்சிய பகுதியில் ரேடியோ பாட்டரி தட்டுப்பாட்டினுல் பல ரேடியோக்கள் இயங்காமலிருப்பதாகவும், அதிக விலை கொடுத்தும், பாட்டரிவாங்கமுடியாமலிருப்பதாகவும், டிரைபட்டரிசெட் ரேடியோவிலும் பார்க்க, டிரான்ஸிட்டர் வாங்குவதால் பட்டரிகள் சுலபமாக வாங்க முடியுமென்றும் திரு. நல்லதம்பி கூறினுர்.

கிளிநொச்சிப் பகுதியில் காலை 8 மணிக்குப் பின்தான் கிராமமக்கள் வானெலி கேட்பதாகவும் சினிமாப் பாடல்களைக் குறைத்து சங்கீத நிகழ்ச்சிகளைக் கூட்டினுல் நல்லதென்றும் அவர் மேலும் கூறினுர்.

கிளிநொரிசிப் பகுதியில் வானெலிப் பெட்டிகள் மிகவும் குறைவாக இருப்பதால் நடைபெற்ற நிகழ்ச்சிகளை, சிறுபுத்தகமாக வெளியிட்டால் நல்லதென்றும் கூறப்பட்டது. அப்புத்தகத்தில் கைத்தொழில், விவசாயம், சமயம்பற்றிய பேச்சுக்கள், கருத்துக்கள் இருக்க வேண்டுமென்றும் கூறப்பட்டது.

டிரான்சிஸ்ட்டர் ரேடியோக்களை 150 ரூபாவிற்குப் பெற முடியுமானுல் அதிகமானேர் வாங்குவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வலி. வடக்கு கிராமமுன்னேற்றச் சங்கத்தைச் சேர்ந்த பண்டிதர் வி. நடராசாவும் மற்றும் நால்வரும் சாட்சியமளித்தனர்.

அரசியல் தலையீடு இல்லாமல் வானெலி நிலையம் சுதந்திரமாக இயங்க வேண்டுமென்றும் பத்திரிகைகளை அரசாங்கம்எடுக்கக் கூடாதென்பதுபோல், வானெலியிலும் அரசியல் தலையீடு கூடாதென்றும் பண்டிதர் நடராசா கூறினுர்.

திரு. என். புரூடி சாட்சியமளிக்கையில் வானெலியில் செய்திகள் குறைவாக இருப்பதாகவும், கிராமப்புறச் செய்திகளையும் வெளியிட வேண்டுமென்றும் கூறினுர்.

இன்றுகாலை 9 மணிக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறும்.

## விளம்பரம் வேறு, வியாபாரம் வேறு!

யாழ்ப்பாணம், வியாழன் அண்மையில் ஒரு பிரபல பிஸ்கட் தயாரிக்கும் கம்பெனி அதன் எல்லா விதமான பிஸ்கட்டுகளின் விலைகளையும் குறைத்துள்ளதாக பத்திரிகையில் விளம்பரப்படுத்தியிருந்தது.

ஆனுல் கடைகளில் இந்த விலைகளில் ஒருவித மாற்றமும் இல்லாமலிருக்கிறது. முன்னிருந்த விலைக்கே விற்பனை செய்யப்படுகிறது.

இதுபற்றி யாழ்ப்பாணத்திலுள்ள பல கடைக்காரர்களிடம் நமது நிருபர்விசாரித்தபோது பத்திரிகைகளில் விலை குறைக்கப்பட்டுவிட்டதென தெரிவித்தால்மட்டும் பொருட்களின் விலை குறைந்துவிடாதெனத் தெரிவித்தனர்.

## டோக்கியோவில் பெரும் ஆர்ப்பாட்டம்

டோக்கியோ, நவ. 10 ஜப்பான் - தென்கொரிய சகஜ உறவுநிலை உடன்படிக்கையை எதிர்த்து 60000க்கு மேற்பட்டோர் நேற்று பார்லிமெண்டுக்கு வெளியே ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

## ஐக்கிய நாணயசங்க வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியா. கொழும்புத்துறை மத்திய ஐக்கிய நாணய சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் கொழும்புத்துறை மகா வித்தியாலயத்தில் திரு. மு. செல்லையா தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் காரியதரிசி திரு. க. இராஜசிங்கம் பேசுகையில், நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அடிமைப்பட்டிருந்த எமது நாடும், நாமும் முன்னேறவேண்டுமானுல், தன்னிறைவுபெற்று வாழவேண்டுமானுல் உலகிலுள்ள மூன்று அடிப்படை அமைப்புகளை ஆராயவேண்டுமென்றும், அதற்கேற்ப சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

சங்கத்தின் புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்; திரு. ச. இராசநாயகம், உபதலைவர்: திரு. மு. செல்லையா, காரியதரிசி: திரு. க. இராஜசிங்கம், உபகாரியதரிசி: திரு. அ. க. பரமநாதன், தனாதிகாரி: திரு தி. நடராசா. நான்கு பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## ஆசிரியர்களுக்கு மந்திரி ஆலோசனை

பொல்காவலை, புதன் பாடசாலையிலிருந்து அரசியல் எவ்வளவிற்கு அப்பால் எடுத்துச் செல்லப்படுகின்றதோ அவ்வளவிற்கு பாடசாலைகளுக்கும் மாணவர்களுக்கும் நன்மையுண்டு. அத்துடன் ஆசிரியர்கள் தங்கள் வேலைகளை கவனிக்க வேண்டும் என்று உணவுமந்திரி திரு. எம். டி. பண்டா பொல்காவலையில் ஒரு பாடசாலையின் கட்டடத்தை திறந்துவைக்கும்பொழுது குறிப்பிட்டார்.